**<u>முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்</u>**

**<u>O.S.No.237/2021</u>**

| | | |
|---|---|---|
| வாதி தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | கிருஷ்ணன் |
| தகப்பனார் / கணவர் | .. | ஜெயராமன் |
| வயது | .. | |
| தொழில் | .. | விவசாயம் |
| கிராமம் | .. | அனத்தாங்கல் |
| தாலுக்கா | .. | ஆற்காடு தாலுக்கா |

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் நாள் புதன்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**<u>1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் இந்த வழக்கு சொத்தை பொறுத்து 1/3 கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இதில் எனது பெற்றோர்களின் பூர்விக சொத்து என்றால் சரிதான். என் தாத்தா இறந்த பிறகு மரகதம் மற்றும் அவரது சகோத, சகோதரிகளான ராஜம்மாள், செவிடன் என்கிற முனுசாமி, வரதன் மற்றும் அரிகிருஷ்ணன் ஆகியோர்களின் கூட்டு குடும்ப சொத்து என்றால் சரிதான். அதன்படி 1 ம் பிரதிவாதிக்கு 1/3 பங்கு உள்ளது என்றால் சரிதான்.

**<u>3 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கில் யாரெல்லாம் வாதிகள் இருந்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் நான் மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன். வாதிகள் அனைவரும் இறந்த அரிகிருஷ்ணன் அவர்களின் தங்கை மரகதம் வாரிசுகள் என்றால் சரிதான். நாங்கள் அரிகிருஷ்ணன் நேரடி வாரிசுகள் இல்லை என்றால் சரிதான், அவர் என்னுடைய தாய் மாமன். வழக்கு சொத்துக்கள் அனைத்தும் இறந்தபோது அரிகிருஷ்ணனின் தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல, கூட்டு குடும்பமாக இருந்தபோது வாங்கியது. மேற்படி சொத்துக்கள் அவர் உயிருடன் இருக்கும் காலம் வரை அவர் தான் அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். என்னுடைய தாத்தா பெயர் இராமலிங்கள்,

அவருக்கு எத்தனை மனைவிகள் என்றால் மூன்று மனைவிகள். மூன்று மனைவிகளுக்கும் எத்தனை பிள்ளைகள் என்று தெரியும், முதல் மனைவி எல்லம்மாளுக்கு பெருமாள், ராமசாமி இரண்டு பிள்ளைகள் ஆவார்கள். இரண்டாவது மனைவி ரங்கநாயகி அவர்களுக்கு ஒரே மகன் கண்ணன், மூன்றாவத முனைவி மாணிக்கம்மாள் அவர்களுக்கு 6 குழந்தைகள் 1. செவிடன் என்கிற முனுசாமி, 2. வரதன், 3. ராஜம்மாள், 4. மரகதம்மாள், 5. அரிகிருஷ்ணன், 6. பொன்னி ஆவார்கள். நான் என்னுடைய முதல் நிரூபண வாக்குமூலத்தில் 1950ல் பாகப்பிரிவினை நடைபெற்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1950 பாகப்பிரிவினை பிறகு அவர்கள் அவர், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தில் தனியாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் அனைத்து அரிகிருஷ்ணன் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான், கூட்டு குடும்பமாக இருந்தபோது வாங்கியது. அரிகிருஷ்ணன் 17.12.2021ல் வழக்கு சொத்துகள் ஒரு உயில் எழுதி பதிவு செய்யபட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி உயில் ஆவணத்தில் வழக்கு சொத்துக்கள் சுய வருமானத்தில் சம்பாதித்த சொத்தாக கூறியுள்ளார் என்றால் வாய்ப்பு இருக்கிறது, காரணம் அவர் உடல்நலம் சரியில்லாமல் இருந்தார். கூர் சீட்டு மூலமாக வந்த பாகத்தை செவிடன் மற்றும் முனுசாமி, அரிகிருஷ்ணனுக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 உயில் அரிகிருஷ்ணன் உயில் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் பற்றி எப்படி தெரியவந்தது என்றால் நாங்கள் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு செல்வது வழக்கம் அப்போது தான் பார்த்தோம். மேற்படி உயிலின் படி 1 முதல் 6 வரையிலான பிரதிவாதிகளுக்கு தான் உயில் எழுதியுள்ளார் என்றால் சரிதான், ஆனால் எழுதியது தவறு. என்னுடைய தந்தை பெயர் ஜெயராமன், அவர் 1992 ஆண்டு இறந்தார். அவரது இறப்பு சான்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மரகதம்மாள் சுமார் 1985 ஆண்டு இறந்தார். அவரது இறப்பு சான்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வாரிசு சான்று தாக்கல் செய்யவில்லை. அதேபோல என்னுடைய தாத்தா ராமலிங்கத்தின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ், அவருடைய மூன்று மனைவியர்கள் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. அதேபோல இராமலிங்கத்தின் முதல் இரண்டு மனைவிகளின் குழந்தைகள்

இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அரிகிருஷ்ணனுக்கு திருமணம் ஆகி சரோஜா என்ற மனைவி இருந்தார் என்றார் தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் அரிகிருஷ்ணன் அந்த உயிலில் சொல்லியுள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. அரிகிருஷ்ணன், சரோஜா தம்பதிகளுக்கு வாரிசுகள் கிடையாது என்று தெரியுமா என்றால் தெரியாது. அரிகிருஷ்ணன் கடைசி காலத்தில் எங்கு இறந்தார் என்றால் அவரது மனைவியின் தங்கை வீட்டில் இருந்து அங்கு தான் இறந்துபோனார். அரிகிருஷ்ணனின் ஈமச் சடங்கை அவர் தான் செய்தார் என்றால் சரிதான், நானும் சென்றிருந்தேன். அரிகிருஷ்ணனின் சம்பாத்திய சொத்தில் எனக்கும், வேறு நபர்களுக்கும் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. அரிகிருஷ்ணன் வழக்கு சொத்துகள் வாங்கும் போது எனக்கு என்ன வயது இருக்கும் என்றால் எனக்கு சுமார் 20 வயது இருக்கும். அரிகிருஷ்ணன் தன்னுடைய சொத்தினை பொருத்து முடிவெடுக்க அவருக்கு மட்டுமே உரிமை உள்ளது என்றால் சரியல்ல. நாங்கள் கூட்டாக இருந்தோம். எனக்கும், அரிகிருஷ்ணன் சொத்திற்கும் எந்த வித உரிமையும், பாத்தியமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் மற்றும் 1, 2 பிரதிவாதிகள் அரிகிருஷ்ணன் இறந்ததை பயன்படுத்திக்கொண்டு பொய்யான விவரங்களின் அடிப்படையில் தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Taken down before by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- N.Suresh
**Principal Subordinate Judge,**
**Cheyyar.**